[பேரவைத் தலைவர்] [2015 ஆகஸ்ட் 31

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

166—

கண்காணிப்புக் குழு

***51923—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட கரும்பு விலை கரும்பு விவசாயிகளுக்குக் கிடைப்பதைக் கண்காணிக்க குழு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் அரசு நிர்ணயித்த விலையை உடனடியாக அமல்படுத்துவதை உறுதி செய்து கண்காணிக்க ஏற்கெனவே மாவட்ட ஆட்சியர் மற்றும் சர்க்கரைத் துறை இயக்குநர் இருக்கின்ற காரணத்தினால் இதற்கு அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் போதிய வருவாய் இல்லாத காரணத்தினால் கரும்பு சாகுபடி வேகமாகக் குறைந்து வரும் சூழ்நிலையில், எந்தவொரு தனியார் ஆலையும் தமிழக அரசு கரும்புக்கு அறிவித்த டன் ஒன்றுக்கு 2,650 ரூபாய் என்பதை விவசாயிகளுக்கு வழங்குவதில்லை. குறிப்பாக செஞ்சி, விழுப்புரம் பகுதிகளிலுள்ள சர்க்கரை ஆலைகள் இந்த ஆண்டு டன் ஒன்றுக்கு 1,800 ரூபாய்தான் வழங்க முடியும் என்று அறிவித்தன. இதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த பின்னர், முதல் தவணையாக 1,800 ரூபாயும், இரண்டாம் தவணையாக மீதமுள்ள தொகை 600 ரூபாயும் வழங்கப்படும் என்று ஆலைகள் உறுதியளித்திருக்கின்றன. ஏற்கெனவே விவசாயிகளுக்கு பல நூறு கோடி ரூபாய் நிலுவைத் தொகை வழங்க வேண்டி இருக்கின்ற சூழ்நிலையில், இது எவ்வாறு சாத்தியம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில்கொள்ள வேண்டும். ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவுதான் இருக்கிறது? ஒருசிலர் 600 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள்; வேறுசிலர் 700 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். எவ்வளவுதான் நிலுவை இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், அனைத்து சர்க்கரை ஆலைகளும் தமிழக அரசு அறிவித்த டன் ஒன்றுக்கு ரூ.2,650/– வழங்குவதை உறுதிசெய்யும் வகையில், கண்காணிப்புக் குழு அமைத்து, அதனை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வி கேளுங்கள். இன்னொரு கேள்வி கேட்க உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புச் சாகுபடி குறைந்துவிட்டது என்று சொல்லியிருக்கின்றார். அது தவறான கருத்து. 2009–2010 ஆம் ஆண்டு 3,16,000 ஹெக்டேர் உற்பத்தி இருந்தது. அது 2011–2012–ல் 3,46,000 ஹெக்டேர் ஆகவும், 2012–2013–ல் 3,48,000 ஹெக்டேர்

ஆகவும் உயர்ந்திருக்கிறதேயொழிய, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கரும்புச் சாகுபடி குறையவில்லை என்பதை முதலிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, 1,800 ரூபாய்தான் முதலில் கொடுப்பார்கள், மீதி 600 ரூபாய் பிறகு கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இது தவறான தகவல். ஏனென்று சொன்னால், மத்திய அரசு நிர்ணயித்த விலையை எந்தச் சர்க்கரை ஆலையும் கொடுக்கமாட்டோம் என்று சொல்லவில்லை. ஏற்கெனவே அவர்கள் 2 தவணையாகக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதை அரசியல் ஆக்கவேண்டுமென்பதற்காக சிலர் உடனடியாகப் போராட்டம் என்று அறிவித்தார்கள். அது எங்களுடைய கவனத்திற்கு வந்தவுடன் உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, ஆலைகளுடன் பேசி 2,350 ரூபாய் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, S.A.P. அதாவது, மாநில அரசினுடைய பரிந்துரை விலையைப் பொறுத்தவரையில், இன்று உலக அளவிலேயும், இந்திய அளவிலேயும் சர்க்கரையின் விலை குறைந்திருக்கின்ற காரணத்தால், மத்திய அரசு, ஏற்கெனவே உறுதியளித்தபடி ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் வங்கியின் மூலமாகக் கடன் உதவி வழங்குவதாக அறிவித்துள்ளது.

மத்திய அரசினுடைய ஆதார விலையைத் தராத காரணத்தால் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளெல்லாம் அவர்களுக்கு முதலில் கொடுத்துவிட்டு மற்ற மாநிலங்களுக்குப் பிறகு கொடுக்கவேண்டுமென்று போராட்டம் நடத்தியதன் காரணமாக அது வழங்கப்படவில்லை. மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வங்கிக் கடன் கிடைத்தவுடன் உடனடியாக அனைத்து விவசாயிகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, S.A.P.–மாநில அரசினுடையவிலையைப் பெற்றுத்தரும். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–05

கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரை சர்க்கரை விலை குறைவதற்கு முன்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதுகாறும் எந்த நிலுவையும் இல்லாமல் விவசாயிகளுக்கு

2015 ஆகஸ்ட் 31]

உடனுக்குடன் அந்தத் தொகையைக் வழங்கிக்கொண்டு வந்தது. இன்னும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், கடந்த கால அரசு 2010–2011 ஆம் ஆண்டில் ரூபாய் 325 கோடி நிலுவைத் தொகையை வைத்து விட்டுச் சென்றது. ஆட்சிக்கு வந்த மூன்று மாத காலத்திற்குள்ளேயே மாண்புமிகு அம்மா அவர்கள், அவர்களையெல்லாம் அழைத்து, உடனடியாக விவசாயிகளுக்கு அந்தப் பணத்தை வழங்கவேண்டுமென்று, ரூபாய் 325 கோடி நிலுவைத் தொகையை வாங்கி, வழங்கி இருக்கின்றார்கள். ஆக, மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை நிச்சயமாகப் பெற்றுக் கொடுப்பார்கள் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. இப்போது சர்க்கரை விலை குறைந்திருக்கிற காரணத்தினால், சிறிது சிரமம் இருக்கின்ற காரணத்தால் நிலுவை உள்ளது. உடனடியாக அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் நடத்திய பேச்சுவார்த்தையில் நானும் கலந்துகொண்டேன். ஆலைகள் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அரசு அறிவித்த தொகை ரூ.2,650/–ஐக் கொடுக்க முடியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய சர்க்கரைக்கு வாட் வரி விதிக்கப்படுவதாகவும், வெளி மாநிலமாகிய கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரப்படும் சர்க்கரைக்கு G.S.T. வரி மட்டுமே விதிக்கப்படுகின்ற காரணத்தினால், அது குறைந்த விலையில் இங்கு கிடைப்பதாகவும் தெரிவித்தார்கள். மதுவிற்கு எதிரான கொள்கையை பாட்டாளி மக்கள் கட்சி கூறியிருந்தாலும் ஒரு கருத்தை அறிவதற்காக நான் கேட்கின்றேன். தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் எத்தனாலுக்கு 14 சதவீதம் வாட் வரி விதிக்கப்படுவதாகவும், கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரக்கூடிய எத்தனாலுக்கு அதிகளவில் G.S.T. வரியும், இறக்குமதி வரியும் இரத்து செய்திருக்கக்கூடிய காரணத்தினால், தமிழகத்தில் உற்பத்தி செய்கின்ற சர்க்கரைக்கும் எத்தனாலுக்கும் விலை கிடைக்காத சூழ்நிலையில், நஷ்டத்தில்

[2015 ஆகஸ்ட் 31

இயங்கிக்கொண்டிருப்பதாகவும், இதனால் விவசாயிகளுக்கு அந்தத் தொகையை வழங்க முடியவில்லை என்றும் கூறியிருக்கிறார்கள். எனவே, அதுகுறித்தும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையில் இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.3,000/– வழங்கப்படும் என்று கூறியிருப்பதையும், அது எப்போது வழங்கப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்திருக்கின்றார்கள். தேர்தல் அறிக்கையிலே ரூ.2,500/– கொடுப்போம் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்திருக்கின்றார்களேயொழிய, ரூ.3,000/– என்று சொல்லவே இல்லை. அதை தயவுசெய்து திருத்திக்கொள்ளவேண்டும். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சர்க்கரை ஆலை அதிபர்கள் எத்தனாலுக்கு வாட் வரியை நீக்கவேண்டுமென்று தெரிவித்ததாகச் சொல்லியிருந்தார்கள். அவர்கள் Purchase Tax–ஐ நீக்கவேண்டுமென்று சொன்னதற்கிணங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக Purchase Tax–ஐ நீக்கினார்கள். கிட்டத்தட்ட 70 முதல் 80 கோடி ரூபாய் அளவிற்கு அவர்களுக்குச் சலுகையைக் கொடுத்தார்கள். சர்க்கரை விலை குறைந்துவிட்ட காரணத்தினால் அவர்களுக்கு இந்த ஆண்டு நஷ்டம் ஏற்பட்டது உண்மைதான். அதில் மாற்றுக் கருத்து இல்லை. 2010–2011 ஆம் ஆண்டில் ரூ.2,000/– என்று இருந்தபோது, சர்க்கரை கிலோ ரூ.40/–க்கு விற்கப்பட்டது. இத்தனை ஆண்டு காலமாக விவசாயிகளுக்குச் சேர்த்துக் கொடுத்தார்கள். வியாபாரம் என்றால் ஓர் ஆண்டு இலாபம் குறைவாக வரும், மற்றோர் ஆண்டு இலாபம் அதிகம் வரும். அதையெல்லாம் கருத்திற்கொண்டுதான் வியாபாரம் செய்யவேண்டும். ஆகவே, இந்த ஆண்டு விலை குறைந்து விட்டது. அதற்காக உடனடியாக Tax–ஐ நீக்கவேண்டும் என்று கூறுவது சரியல்ல. அது அரசினுடைய கொள்கை முடிவு. ஆகையால், அதுகுறித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல்,

2015 ஆகஸ்ட் 31]

மற்ற மாநிலங்களில் இருக்கின்ற நிலுவைத் தொகையை ஒப்பிடுகின்றபோது, நமது மாநிலத்தில்தான் அது குறைவு. கிட்டத்தட்ட 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு இந்தியா முழுவதும் கரும்பிற்குண்டான விலையைக் கொடுக்கவேண்டிய நிலுவை இருக்கின்றது. தமிழகத்திலே கிட்டத்திட்ட 902 கோடி ரூபாய் மட்டும்தான் இருக்கின்றது. அதையும் உடனடியாகப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 167, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

167—

சார்பதிவாளர் அலுவலகம்

***20115—திரு. கோ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மேற்கு தொகுதி, சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தை சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) ஆம்.

(ஆ) சூரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்ட, போடிநாயக்கன்பட்டி, வார்டு N பிளாக் 21, நகர புல எண் 27–ல் 11,840 சதுர அடி நிலம் மாவட்ட ஆட்சியாளர் அவர்களால் பதிவுத் துறைக்கு நில மாறுதல் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்த கொள்கை முடிவின் அடிப்படையில் வரும் நிதியாண்டில் மேற்படி இடத்தில்